# இலங்கை பற்றிய போர்க்குற்ற விசாரணையில் இரண்டாவது முறையாக கைது நடவடிக்கையைத் தொடர்ந்து, இது பற்றி தகவல் அளிக்குமாறு பொலீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது

2000 ம் ஆண்டுகளின் முற்பகுதியில் இலங்கை உள்நாட்டுப் போருடன் தொடர்புடைய போர்க்குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பயங்கரவாத எதிர்ப்பு துப்பறியும் அதிகாரிகள், தங்கள் விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களைக் கொண்டவர்கள் பொலிஸைத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த விடயத்தை நடாத்தி வரும் பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸார் (CTP) இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, இங்கிலாந்தைத் தளமாகக் கொண்ட இரண்டாவது நபர் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்த விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கமாண்டர் டொமினிக் மர்பி கூறினார்**: "இந்தக் குற்றங்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் மீது நீடித்த மற்றும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நாங்கள் அறிவோம், மேலும் இந்த விசாரணையின் ஒரு பகுதியாக நாங்கள் இப்போது இரண்டு கைதுகளை மேற் கொண்டுள்ளோம். இப்படியான மிகக் கடுமையான குற்றங்களை விசாரிக்கும் அதிகாரிகளின் முன்னேற்றத்தின் அடையாளம் இதுவாகும்.

“அனைத்துத் தீவிரமான வழக்குகளைப் போலவே, வழக்கைத் தொடர்ந்து கட்டமைப்பதற்கு, முடிந்தவரை நேரில் பார்த்த சாட்சியங்கள் தேவை. இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது நடந்த இந்தச் சம்பவங்கள் குறித்து இதுவரை முன்வராத, இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் இருப்பதை நாம் அறிவோம். காவல்துறையைத் தொடர்பு கொள்ளுமாறு அப்படியானவர்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் - நாங்கள் உங்களுக்கு ஆதரவளிப்போம், உங்கள் தகவல் மிகவும் இரகசியமாகவும், நம்பிக்கையுடனும் நடாத்தப்படும்.

இந்த விசாரணைக்கு உதவக்கூடிய, நேரடித் தொடர்புடைய தகவல்களைக் கொண்டிருக்கும் எவரிடமிருந்தும் - குறிப்பாக 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இலங்கையில் வாழ்ந்தவர்கள் அல்லது அந்த நேரத்தில் இலங்கையில் அவர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள்,

வாழ்ந்திருந்தால் மற்றும் பின்னர் புலம்பெயர்ந்தவர்கள் ஆகியோரிடம் இருந்து இது பற்றி கேட்க அதிகாரிகள் ஆர்வமாக உள்ளனர்.

இது பற்றி தகவலை வழங்க, போர்க் குற்றங்கள் குழுவிற்கு நேரடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பவும்: SO15Mailbox.WarCrimesTeam@met.police.uk.

மாற்றாக, +44 (0)800 789 321 என்ற எண்ணில் அந்தரங்கமாக போலீஸை அழைக்கவும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றச் சட்டம், 2001 இன் பிரிவு 51 இன் கீழ் குற்றம் புரிந்ததாக சந்தேகத்தின் பேரில் 21 நவம்பர் 2023 அன்று தெற்கு லண்டனில் உள்ள முகவரியில் 60 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் போலீஸ் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டு பிணையில் இருக்கிறார்.

2001 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரசியல் பேரணியின் போது இரண்டு பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பாக இந்தக் கைது நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது.

இது பிப்ரவரி 2022 இல் செய்யப்பட்ட கைது நடவடிக்கையின் தொடர்ச்சியாகும், இதே குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் 48 வயது நபர் ஒருவரை போலீஸார் கைது செய்திருந்தனர். 2000ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்தக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது. விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் குறித்த நபர் விசாரணைகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு சம்பவங்களும் 2017 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புக் காவல் போர்க் குற்றங்கள் பற்றி விசாரிக்கும் குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின் ஒரு பகுதியாகும், இது மெட் (met) பொலிஸாரின் பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பின் கீழ் நடத்தப்படுகிறது மற்றும் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**பின்னணித் தகவல்**:

CTP போர்க் குற்றக் குழுவானது, போர்க்குற்றங்கள் மற்றும் மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் தேசியப் பொறுப்பைக் கொண்ட ஒரு சிறிய குழுவாகும்.

இது CTP மூலம் நேரடியாக நிதியளிக்கப்பட்டு நாடு முழுவதும் செயல்படுகிறது. குறிப்பிட்ட இந்தக் காவல்துறைப் பணியின் சிக்கலான மற்றும் சிறப்புப் பகுதியைக் கையாள்வதற்கு, சாதாரணமாக முன் நின்று செயல்படும் உள்ளூர் பொலீஸ் அதிகாரிகள் தங்கள் கடமையில் இருந்து விலகிச் செல்லாமல் இருப்பதை இது உறுதி செய்கிறது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பரிந்துரைகளை (காவல்துறைக்கான அறிக்கைகள்) மதிப்பிடுவதற்கான கூட்டுக் காவல்துறை மற்றும் CPS வழிகாட்டுதல்களை இங்கே பார்க்கலாம்:
https://www.cps.gov.uk/publication/war-crimescrimes-against-humanity-referral-guidelines